**Previous Examination date – 12.03.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 209 of 2023**

**Deposition of Witness P.W.7**

| | |
|---|---|
| **Name : திருமலைச்சாமி** | **Father/Husband's Name : திருமலைச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.04.2026.**

**A1, A2 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.தங்கராஜ் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.தங்கராஜ் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.தங்கராஜ் தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 13.01.2013ம் தேதி பழனி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த வேலுச்சாமி என்பவர் மகன் பழனிச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து 16.30 மணிக்கு நிலையம் வந்து பழனி தாலுகா காவல் நிலைய குற்ற எண்.18/2022 பிரிவுகள் 294(b),323,324,506(2) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் கோப்பை சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களிடம் ஒப்படைத்ததை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வினோத், சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் காயம்பட்ட வேலுச்சாமி மகன் பழனிச்சாமி என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சசிகலா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட சாதாரண காயம் என சான்றளித்துள்ளார். **விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.தங்கராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் கதிர்வேல், கிருஷ்ணன் ஆகியோர்கள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றதால் எதிரிகள் கைது செய்யப்படவில்லை. பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,324,506(2) இ.த.சவின் கீழ் 31.01.2022ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.04.07 17:56:05 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.